# அறிவைத் தரும் பாடல்கள்

## சிறுவர் பாடல்கள்

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : அறிவைத் தரும் பாடல்கள்

ஆசிரியர் : ச. அருளானந்தம் (கேணிப்பித்தன்)

வகை : சிறுவர் இலக்கியம்

உரிமை : ஆசிரியருக்கு

அட்டைப் படம் : ~~அருள்கலக்சிகா~~ அ. அ. அருள் சுலக்ஷிகா

06-10-2010

முதற்பதிப்பு : ~~24~~-01-2010

வெளியீடு : அருள் வெளியீட்டகம்
37 / 7, மத்திய வீதி, உவர்மலை-
திருகோணமலை.
தொலைபேசி இல: 026-2221507.

கிடைக்குமிடம் : லங்கா புத்தகசாலை.
F. L.14.1. டயஸ் பிளேஸ்.
குணசிங்கபுரம்.
கொழும்பு-12.
தொ.பே. இல: 011- 2341942

ISBN : 978-955-98211-8-0

விலை : ரூபாய் ~~100/=~~ 150/=




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னிடமிருந்து .....

சிறுவருக்குரிய சிந்தனைப் பாடல்கள் சிறுவர் இலக்கியத்தில் மிகமிகக் குறைவு எனப்பல அறிஞர்களும் ஆதங்கப்பட்டார்கள். சிறப்பாக எனது நண்பர் பேராசிரியர் கலாநிதி செ.யோகராஜா அவர்கள் தமது ஆய்வுகளினூடாகத் தெரிவித்திருந்தார்கள். 'கருணை யோகனை' எனக்கு நன்றாகவே தெரியும். ஆதலால் அவரது அந்தக் கூற்றுக்களை நிறைவு செய்யும் நோக்கத்திலும், நமது சிறுவர்களின் ஆவலைத் தூண்டுமுகமாகவும் இவ்வகைப் பாடல்களைப் புதுமையாக படைத்துள்ளேன்.

சிறுவர்கள யார்? என்ற வரையறையினுள் நின்றுகொண்டு கருவறை தொடக்கம் பதினெட்டு வயது வரையுள்ள ஆண்பெண் இருசாராரையும் கவனத்தில் கொண்டு இப்பாடல்களை எழுதியுள்ளேன். இவ்வகைப் பாடல்களை கருவுற்ற தாய்மார்கள் கட்டாயம் படிக்க வேண்டும். எனது பாடல்களைப் பலர் பலவிதமாக ஆய்வுகள் செய்கிறார்கள். சிறுவர் இலக்கியம் சிறுவரின் உளநிலை, ஒழுக்கநிலை, ஆளுமை என்பவற்றை வளர்த்தெடுக்கும் பண்புகளைக் கொண்டிருக்கவேண்டும். அத்துடன் அவர்களது வயது கவனிக்கப் படவேண்டும் என்றெல்லாம் கூறுவார்கள். சிறுவர் இலக்கியம் பற்றி விமர்சனம் செய்வோர் படைப்பாளியின் நிலையினை அறிவதாக இல்லை. சிறுவர் இலக்கியம் படைப்பாளி சிறுவரின் உளவிருத்தி, வயது, அனுபவம், ஆளுமைவிருத்தி ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு தனது படைப்பை அனுபவித்து படைக்கின்றான். அத்துடன் அவன் வெளியிடும் நூலில் சிறுவர்கள் அனைவருக்கும் ஏற்ற பல்வகைத்தரத்திலான பாடல்களை ஒழுங்கு முறையில் சேர்க்க வேண்டும். அப்படி அமையாதுவிடின், படைப்பாளியின் முதலுக்கே நட்டம் வந்துவிடும். கூறுவது கூறல் முதல், சொற்புணர்ச்சிகள் ஈறாகவும், சூழலில் காணும் விஞ்ஞான, மெஞ்ஞானமும் சேர்ந்து அனைத்தும் கலந்ததாக அமைக்க வேண்டியுள்ளதை ஆய்வாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இதனை விடுத்து தான் தோன்றித்தனமாக எழுதவேண்டும் என்பதற்காக எழுதுதலைத் தவிர்த்து, சிறுவர் இலக்கியப் படைப்பாளிகளைக் கைலாகு கொடுத்துத் தூக்கி விடவேண்டும்.

சிறுவர் இலக்கியம் சிறுவர்களைக் குதூகலத்தில் ஆழ்த்தி, சிந்தனையை வளர்த்துச் சுடர்விடச் செய்யவேண்டும். சாதனையாளர்கள் புதிதாக எதையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதில்லை. ஆனால் அவர்கள் செய்வதை வித்தியாசமான வழிகளில் செய்கிறார்கள் என்பது பேரறிஞர்களது கருத்தாகும். ஆய்வாளர்களும் திரு.கே.எஸ். சிவகுமாரன் வழியில் நின்று ஆய்வுகள் செய்து இலக்கிய கர்த்தாக்களை ஊக்குவிக்வேண்டும். எனக்குக் கீழ்பிரிவு மாணவர்கள் தொடக்கம் பட்டப்படிப்புப் படிக்கும் மாணவர்கள் வரைக்கும் கற்பித்த அனுபவம் உண்டு. இன்னும் சிறப்பாக முன்பள்ளிக் கல்விக்குரிய பாடவிதானத்தை ஆக்கியும் முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சியும் அளித்து வருகிறேன். இத்துறையில் நீண்டகால அனுபவம் இருப்பதால் சிறுவருக்கான பல்வகை இலக்கியங்களைப் படைக்கின்றேன். படைப்பதில் சந்தோஷம் அடைகிறேன். எனது சிறுவர் பாடல்களில் 'அவசர கோலங்கள்' இருக்காது. ஒவ்வொன்றும் தேவை கருதியே எழுதியுள்ளேன்.

நமது இலக்கிய வளர்ச்சிப் போக்கினை அவதானித்தால், முதலில் ஒரு பொருள் ஒருதனிப்பாடலாக அமைந்திருக்கும். பின்னர் ஒரு பொருளைப் பல பாடல்களில் எழுதும் மரபு வந்தது. இதனை அடியொற்றி பின்னர் எழுந்த இலங்கியங்கள் வளர்ச்சி கண்டன. இவற்றைப் பின்பற்றியதாகக் 'காகமும் தம்பியும்', 'கடலும் காவிரியும்' சிறுவர்பாடல் தொகுதிகளை வெளியிட்டேன். எனது பாடல்கள் மிகவும் எளிமையான சொற்களைக் கொண்டு சிறுவர்கள் எந்த மெட்டிலும் பாடக்கூடியதாக அமைந்திருப்பதை அவதானிக்கலாம். வயது, பருவம், மொழியாற்றல் போன்றவற்றைக் கவனத்தில் கொண்டுதான் எனது பாடல்கள் அமைந்திருக்கும். சிறுவர்கள் நாளானந்தம் காணும் அல்லது சந்திக்கும் நிகழ்வுகளை? அவர்களைக் கற்பனையில் ஆழ்த்திச் சிந்திக்க வைப்பதற்காகவும், தேடலில் ஈடுபடுவதற்காகவும் எழுதியுள்ளேன். வாசித்துத் தேடலில் ஈடுபடவைப்பது ஆசிரியர்களதும், பெற்றோரினதும் கடமையாகும்.

நமது சிறார்களுக்கான பாடல்கள் வேண்டும்.' எனப்பலர் கேட்கின்றார்கள். ஆனால் அவற்றைச் சிறார்களுக்கு அறிமுகம் செய்வதார்.? தொடர்ந்தும் நமது ஆசிரியர்கள் பழமையான பாடல்களையே வகுப்புக்களில் அறிமுகம் செய்கின்றார்கள். அவையும் தேவைதான். தாங்களாகவே பாடவிதானத்துக்கு ஏற்ற பாடல்களை இயற்றியும் அறிமுகம் செய்யலாமல்லவா? ஏன் செய்யமுடியாது, நமது உலகம் மாற்றத்துக்குரியது. 'மாற்றமாம் வையகம்' என்று ஏன் சொன்னார்கள். நாம் காணுகின்ற பொருட்களைச் சற்று வித்தியாசமாகப் பார்த்து, வித்தியாசமாகச் சொல்லலாம் அல்லவா? தேடலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டம் கொள்ள வேண்டும். நான் ஆசிரியராகக் கடமையாற்றும்போது வகுப்புக்கேற்ற பாடல்களை இயற்றி அறிமுகம் செய்தேன். மேல்வகுப்பு மாணவரை எழுதும்படி கூறி, அவர்களை ஊக்குவித்தேன்.

பிள்ளைகள் அறிவின் சுரங்கம். அவர்கள் தீக்குச்சி போன்றவர்கள். தீக்குச்சியை உரசினால் பற்றும். அதனை உரசவேண்டிய நேரத்தில், உரிய இடத்தில் உரசவேண்டும். அறிவியல் பாடல்கள் தேவை என்கிறார்கள். அவற்றைச் சிறார்கள் தேடிப்படிக்கச் செய்தால் அவர்களது சிந்தனை துளிர்விட்டுப் பிரகாசிக்கும். இன்று நமது சிறார்களுக்கு அறிவியலை ஆன்மீகத்தோடு குழைத்துக் கொடுக்க வேண்டும். அது அவசியமானதுமாகும். மேல்நாடுகளில் உதறித்தள்ளிய குப்பைகளை நாம் நமது நாட்டில் புதுமைகளாகச் சேர்த்துக் கொள்கிறோம். நமது சிறார்கள் பாடசாலைகளில் சுமார் பன்னிரெண்டு ஆண்டுகள்வரை கற்கிறார்கள். அந்தக் காலகட்டத்தில் அவர்களைச் சிந்திக்க வைக்கவேண்டும். நல்ல சிந்தனைகள் அவர்களிடமிருந்து பிறக்க வேண்டும். மொழியறிவை ஊட்டவேண்டும். எல்லா மொழிகளும் சிறந்தனவைதான். ஆனால் அந்த மொழிகளின் சிறப்புக்களைச் சுட்டிக் காட்டி மொழியறிவை ஊட்டவேண்டியது பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும் கடமையாகும். நமது நாட்டில் மும்மொழிக் கொள்கையை அமுல்படுத்த அனைவரும் ஒன்றுதிரளவேண்டும்.

மொழியாற்றல் உள்ளவர்களால்தான் முன்னேற முடியும். கற்பனை வளமும், அறிவும் கருவிலேயே உருவாகிவிடுகிறது. அதனை வளர்த்தெடுப்பது சூழலில் தங்கியுள்ளது. வீடும், பாடசாலையும் சமூகமும் நல்ல வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். விடாமுயற்சியை இளமையிலேயே தொடக்கிவிட வேண்டும். பாடப்புத்தகங்களை எழுதுபவர்கள் ஈழத்து எழுத்தாளர்களினது படைப்புக்களை அறிமுகம் செய்யுங்கள். எடுத்துக் காட்டுக்களைக் கையாளும்போது ஈழத்தவர்களது நல்ல படைப்புக்களில் இருந்து தெரிவு செய்து அறிமுகம் செய்வது நமது ஈழத்தவர்களுக்கான இலக்கிய வரலாற்றை அறிமுகம் செய்தவர்களாக போற்றப்படுவீர்கள். இந்நூல் உருவாக்கத்துக்கு உதவியோர் பலர். அவர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றி.

கேணிப்பித்தன் ச.அருளானந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலின் உள்ளே....


வினா பிறந்தது.
சிந்தனை
ஏன் ...ஏன்?
அறிவுக் காட்சி
உலகின் விந்தைகள்
நிலைமாற்றம்
உலகறியதி.
அதிசயமே
கருக்கட்டல்
வளங்கள்
வளியின் வலிமை
வெப்பத்தின் செயல்
வானம் எனும் புத்தகம்
பால் வீதி
விண்ணில் விண்கலம்
வான்வீதிப் பயணம்
எத்தனை அற்புதம்
அழகுச் சூரியன்
புதன்
வெள்ளி
பூமிப்பந்து
சந்திரன்
செவ்வாய்
வியாழன் சனி (சற்றேன்)
ஜூரேனஸ்
நெப்டியூன்
புளுட்டோ
அண்டவெளி
வான்வெளி அற்புதம்
ஒரே பிரபஞ்சம்
அழகுமலைச்சாரல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினா பிறந்தது




காய்கனி கீழே விழுவதுமேன்
காற்று அசைந்து சுழல்வதுமேன்
பேயும் மழைநீர் உருமாறிப்
போவதும் வானத்தில் எப்படியோ?



வெப்பம் ஏற்றத் தண்ணீரும்
மெதுவாய் ஆவியாய் ஆவதுமேன்
உப்புக் கல்லும் தண்ணீரில்
ஊறிக் கரைந்து போவதுமேன்?

திண்மப் பொருளும் ஒருநொடியில்
திரவ நிலைக்கு மாறுவதேன்
திண்மம் திரவ நிலைமாறி
தவழும் வாயு ஆவதுமேன்




வினாக்கள் பலவந்து குவிந்தன
விடைகளும் ஒளிந்து கொண்டன
கனாவாய் ஒளிவிடத் தொடங்கின
காண மனமதும் தவித்தது








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# சிந்தனை



பஞ்சு மேலே பறப்பதேன்
பரந்து நீரும் கிடப்பதேன்.
பஞ்ச பூதச் செயல்களைப்
பார்த்துப் படித்தேன் புரிந்தது.


வானை மனிதன் பார்த்தனன்
வானில் பறவை பறந்தன
நானும் பறந்து பார்க்கணும்
நலமாய் வானில் பறக்கணும்





மீனும் நீரில் நீந்தியே
மிதந்து ஓடித் திரிந்தது.
நானும் நீந்திப் பார்க்கணும்
நன்றாய் மிதந்து போகணும்



மீனைப் போன்று நீந்தவே
மனிதன் முயன்று வென்றனன்.
வானில் பறக்கக் கற்றனன்
விமானம் செய்து பறந்தனன்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஏன்... ஏன்?




காலையில் சூரியன் உதிக்கிறது
கவிழ்ந்த இருளெலாம் ஒளிக்கிறது
மாலையில் சந்திரன் வருகிறது
வானில் விண்மீன் ஒளிர்கிறது




பகலில் சூடாய் இருப்பதுமேன்
படர்ந்த இருளும் மறைவதுமேன்?
பகலில் விண்மீன் எங்குளதோ?
பால்வெண் சந்திரன் ஒளிவதுமேன்?



கடல் நீர்வற்றிப் பெருகுவதேன்
காற்றும் சுழன்று வீசுவதேன்
படகு நீரில் மிதப்பதுமேன்
பாயை விரிக்க விரைவதுமேன்
வானில் மேகம் அசைவதுமேன்



மோதி மின்னல் படர்வதுமேன்?
தானாய் நீர்த்துளி நிலைமாறி
தாரை மழையாய் பொழிவதுமேன்?









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் காட்சி



நீலவான வீதியைப் பார்
நிகழும் விந்தைக் கோலம்பார்
காலை நேரச் சூரியன்தான்
காட்டும் அழகு பார்தம்பி





சிவந்த சூரியக் கோளம்பார்
சூழும் மேகக் கூட்டம்பார்
கவரும் வண்ண உருவம்பார்
காணும் அற்புதக் காட்சிகள்பார்

கடலாய் வானம் விரிந்திருக்கும்
கப்பல் தீவுகள் வாகனங்கள்
படகு, பலவகைத் தொடரணிகள்
பாய்சுறா வாளை மீன்தெரியும்



மாலை நேர வானைப்பார்
வண்ண நிலவின் ஒளியைப்பார்
கோலம் வானம் போடுவதைக்
காண நிலவுக்குப் பயணம்செய்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் விந்தைகள்




நீலவான் கடற் பரப்பினிலே
நிலவும் விந்தைகள் ஆயிரமாம்
கோலக் காட்சிகள் காண்பதற்கு
கோள்களை அறிந்து பார்த்திடலாம்.




மூவகை உருவில் பொருள் யாவும்
மூழ்கிச் சுழன்று மூண்டுளது
தேவர்கள் மானிடர் உயிரினங்கள்
சேர்ந்த கலவைகள் ஆயிரமாம்

சடப்பொருள் யாவும் சுழல்கிறது
சமநிலை வெப்பம் கொள்கிறது
கடத்தும் வெப்பம் நிலைமாறச்
சடுதியாய் வெடிப்புக் கொள்கிறது.



அண்டப் பொருட்கள் விரிகின்றன
அகன்று தூரத்தில் தெறிக்கின்றன
அண்ட சராசரம் சூட்சிமமாம்
அவற்றைச் செய்வது யாரெவரோ?










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைமாற்றம்




புவியில் உள்ள கடல்நீரும்
பாய்ந்து ஓடும் ஆறுகளும்
குவிந்த குளநீர் பரப்புகளும்
கொண்ட வடிவம் திரவநிலை




சூரிய வெப்பம் சூடேற்றும்
திரவம் ஆவியாய் நிலைமாறும்
பாரிய மேகக் கூட்டமதாய்
படர்ந்து வானில் பவனிவரும்




பாரிய திரளாய் உருமாறும்
பனியுரு மெதுவாய் கருவாகும்
வீரிய மின்னேற்றம் தான்கொள்ளும்
வெட்டும் மின்னல் தான்தோன்றும்



படிகத் திரள்கள் உருக்கொள்ளும்
படிந்து மின்சூழ் கருக்கொள்ளும்
வடிவம் நீர்த்துளி பலகொள்ளும்
பாரிய மழையாய் நிலம்வீழும்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகறியதி



உலகில் உள்ள பொருள்யாவும்
உண்மையில் மூன்று நிலைகாணும்
சிலது திண்மம் நிலையிலுண்டாம்
திரவம் வாயு எனப் பகுப்பார்.


திண்மம் உடைந்து துகளாகும்
திரவம் குளிர்ந்து உருமாறும்
திண்ம வடிவம்தான் கொள்ளும்
சூடு கண்டால் திரவநிலையாகும்



திரவம் சூட்டைப் பெற்றுவிட்டால்
சிதைந்து ஆவியாய் மாறியெழும்
அரவமின்றி வான் வெளியில்
அலைந்து திரண்டு முகிலாகும்



முகில்கள் சேர்ந்து திரண்முகிலாய்
மாறி முற்றிக் குளிர்கொள்ளும்
முகிழ்த்து மின்சூழ் கருக்கட்டும்
மயிரிழைத் தூறலாய் மாறிவிடும்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயமே




பூமிப் பந்தில் நிற்கின்றோம்
பரந்து வான்வெளி கிடக்கிறது
பூமிப் பந்தைச் சூழ்ந்துவளி
போர்த்து மூடிக் காக்கிறது.





வளியில் ஆயிரம் கலவையுண்டு
வாயுக் கலவை அணுத்திரளும்
அலையும் தூசி துணிக்கைகளும்
ஆயிரம் கோடி வளியிலுண்டு


சூரிய கதிரலை ஊடறுத்து
சூட்டைப் பரப்பி ஒளியேற்றும்
பாரிய இயக்கம் புவிகொள்ளும்
பகலவன் செயலால் உயிர்வாழும்



வளியின் சமநிலை கலைந்துவிட்டால்
வாழ்க்கை வட்டம் நிகழாதாம்
வளியினைத் தூய்மைப் படுத்துங்கள்
வாழும் உயிரினம் மகிழ்வாகும்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருக்கட்டல்




சிறிய விதையை நட்டுவிட்டால்
சிலநாட் கழிந்து முளைகொள்ளும்
பெரிய மரமாய் ஆகிப்பின்
பூத்துக் காய்த்து கனிதருமாம்.



பூவில் எப்படிக் காய்கள்வரும்
புதினம் இருக்கு யோசிப்போம்.
பூவினம் பற்பல நிறங்களிலே
பூத்து நிற்பதேன் புரிகிறதா?


மகரந்த மணிகள் பூவிலுண்டு
மதுரசத் தேனும் மலரிலுண்டு
மகரந்த மணிகளை வண்டுகளும்
வளியும் காவிச் செல்கிறதாம்



பூவிலும் ஆண்பெண் வகையுண்டு
புல்லிகள் உள்ளே சூழிருக்கும்
கூவிடும் வண்டின் உடல்மேலே
கூடிடும் மகரந்தம் நிறைந்திருக்கும்


காவிச் செல்லும் மகரந்தம்
காவின் வேறு பூக்களிலே
தாவிக் கருக்கட்டல் நிகழ்கிறதாம்
கற்பனை யல்ல உண்மையிது.


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# வளங்கள்

நமது பூமியில் என்னஇல்லை
நமக்கு வேண்டிய அனைத்தையுமே
நமக்காய் இறைவன் வைத்துள்ளான்
நாம்தான் அதனைப் புரியவில்லை

தட்டிப் பார்த்தால் தங்கம்வரும்
தகரம் செம்பு கனியவளம்
எட்டி இடித்தால் இரும்புவரும்
ஈர்க்கும் காந்தம் துருவங்களில்

ஓடும் பொறியை இயக்கவல்ல
ஒருபொருள் நிலநெய் ஒளிந்துளது
பாடும் காற்றின் வலிமையினைப்
பாய்மரக் கப்பலில் பார்த்திடலாம்


அலைகடல் மடியின் அடியினிலே
ஆயிரம் கோடி உயிரினங்கள்
விலைமதிப் பில்லா ரத்தினங்கள்
விளைந்து கிடக்கும் விளைநிலமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வளியின் வலிமை



குளத்தின் நீரைக் குடத்தினுள்ளே
கொள்ள அமுக்கும் வேகத்தில்
குளத்து நீரும் குடத்தினுள்ளே
குபுகுபு குபுவென புகுந்துகொள்ளும்.



தண்ணீர் போகும் வேகத்தில்
திரும்பும் வளியின் செயலதனால்
தண்ணீர் இரைந்து கொள்கிறதாம்
சத்தம் வந்தது தெரிந்துகொண்டேன்



குடத்தை மார்பில் அணைத்தபடி
குப்புற கவிழ்த்துப் பிடித்தபடி
குடத்தொடு குளத்தில் பாய்ந்தவுடன்
குடமே ஓடமாய் மிதக்குமப்பா.

வெற்றுக் குடத்துள் வளியிருந்து
வெளியே வரவழி இல்லையெனில்
வெற்றுக் குடத்துள் வளியிருந்து
விடாது நீரைத் தடுத்ததப்பா.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெப்பத்தின் செயல்




வெப்பம் ஏறப் பொருள்யாவும்
விரிந்து அளவில் பெரிதாகும்
வெப்பம் பெற்ற நீர்நிலைகள்
வெளியில் ஆவி தனைவிடுமாம்




நீரில் வெப்பம் ஏற்றிவிட்டால்
நீரா விசக்தி வெளியாகும்
பாரில் உள்ளோர் பயன்பெறுவார்
பலவித நன்மைகள் உருவாகும்



இடியப்பம் பிட்டு இட்லியும்
இனிக்கும் மோதகம் கொளுக்கட்டை
பிடிக்கும் தீன்வகை அவித்துவிடும்
பெருமை நீராவிக் குண்டேதான்.



அழுக்குத் துணியைச் சீராக்கி
அகற்றும் வெள்ளாவித் தொழிலாகும்
இழுத்து இரும்புப் பாதையதில்
இரைந்து புகைவண்டி ஓடவைக்கும்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம் எனும் புத்தகம்



அண்ணார்ந்து வானைப் பாருங்கள்
அற்புதம் கொட்டிக் கிடக்கிறது
எண்ணில் அடங்கா விண்மீன்கள்
எங்கும் விரிந்து பரந்துளது





வானக் கடலின் எல்லைதனை
வடிவாய் அறிந்தவர் எவருமில்லை
ஊனக் கண்ணால் பார்க்கின்றோம்
உண்மை முற்றும் புரியவில்லை

விரிந்து கிடக்காம் பிரபஞ்சம்
விரிந்து விரிந்து போகிறதாம்
தெரியும் விண்மீன் சிலவேதான்
தெரியா தொகையோ கோடியுண்டு



ஆயிரம் கோடி விண்மீன்கள்
அண்டம் பரந்து சுழல்கிறது
போயொரு முறை பார்த்துவர
புறப்படும் நாளைக் கணித்திடுவோம்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் வீதி



பால் வீதி தன்னைப் பார்தம்பி
பரந்து விரிந்து தெரிகிறது
கோலம் போட்ட மாதிரிபோல்
கோளம் அனைத்தும் தெரிகிறது





சூரியப் பந்து நடுவிலுண்டு
சூழ்ந்து ஒன்பது கோள்களுண்டு
பாரிய ராசிக் கூட்டங்களாம்
பன்னி ரண்டும் பரந்திருக்கு



ஆடு காளை ஜெமினியொடு
ஓடும் நண்டு சிங்கம் கன்னி
ஆடும் துலாம் தேள் அரைமனிதன்
ஆளிப் பரிகுடம் மீனுமுண்டு

ஒன்றை யொன்று ஈர்த்தவண்ணம்
ஒழுங்காய்ச் சுழன்று வலம்வருதாம்
என்றோ கோளங்கள் அத்தனையும்
ஒருநாள் சென்றே பார்த்திடலாம்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விண்ணில் விணகலம்



பறவைக் கூட்டம் போல் நாங்கள்
பறந்து விணகலக் கூடுறைவோம்
உறையுள் இருப்பது அற்புதமே
உள்ளம் விரிந்து விழிப்பாகும்




படுத்து நிமிர்ந்து உலாவரலாம்
பாடிக் கொண்டும் பேசிடலாம்
திடமாய்ச் சொல்வதைக் கவனித்துச்
செயற்பட வேண்டும் கவனியுங்கள்




பாடிப் பறந்து போய்வரலாம்
பார்க்கு மிடமெலாம் அழகுமயம்
ஓடிப் பறக்கும் மேகமெலாம்
உயரப் பறந்து உலாவரலாம்



பூமிப் பந்தைப் பார்த்திடலாம்
புதிதாய் புள்ளியாய் தெரியும் பார்
நாமிப் போது விண்வெளியில்
நலமாய் வலமாய் வருவோமா?










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வான் வீதிப்பயணம்




வானில் பறப்போம் சிறகைவிரி
மனமெனும் கப்பலை முடுக்கிவிடு
வானலை கிழித்துப் புறப்படுவோம்
வருமுகில் ஊடே வலம்வருவோம்



பேனா பென்சில் தேவையில்லை
போதும் நமது கொம்பியூட்டர்
தானாய் இயங்கும் கருவியெலாம்
சரியாய் பதிவை மேற்கொள்ளும்





பால்வெளி தெரியுது பார்தம்பி
பந்தாய் சூரியன் நடுவிலுண்டு
சூழ்ந்து புதன் வெள்ளி பூமியுடன்
செவ்வாய் வியாழன் சனியுண்டு



அப்பால் யுரேனஸ் நெப்டியூனுக்கு
அப்பா லுள்ளது புளுட்டோவாம்
இப்படி எத்தனை பால்வெளிகள்
இருக்குதாம் பிரபஞ்ச வெளியினிலே









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தனை அற்புதம்?




ஆயிரம் கோடி பால்வெளிகள்
அண்டம் சூழ்ந்து பரந்துளது
ஆயிரம் கோடி உடுக்கோலம்
ஆகா எத்தனை அற்புதங்கள்



எப்படி இத்தனை ரகசியங்கள்
எங்கும் பரந்து கிடக்கிறது
இப்படி இவற்றை வைத்தது யார்
எல்லாம் இயங்கச் செய்ததுயார்?




வண்ண வண்ண நிறங்களிலே
வானை அழகு செய்வதைப்பார்
கண்ணைக் கவரும் புள்ளிகளாய்
காட்சி தருவது உடுக்களாம்பார்



அத்தனை உடுக்களும் சுழல்வதைப்பார்
அதனதன் வழியில் செல்வதைப்பார்
எத்தனை அற்புதம் வானில் வைத்தான்
எங்கள் இறைவன் அறிவில்வல்லோன்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகுச் சூரியன்




அற்புதம் அற்புதம் அங்கேபார்
அழகுச் சூரியன் அதுதானா?
சொற்பதம் இல்லை சொல்வதற்கு
செக்கச் சிவந்து சுழல்வதைப் பார்





தன்னைச் சுற்றும் கோளனைத்தும்
தனிவிழி செல்ல இடமளித்தால்
சின்னா பின்னம் சிதைவுண்டு
சிதைந்து எல்லாம் அழிந்துவிடும்

தன்னைத் தானே வலம்வந்து
தானாய் சுழலும் கிரகங்கள்
சொன்ன படிக்குச் சுழல்வதாலே
சூழ்கொள் பருவ காலம்வரும்



சூரியக் குடும்பம் எனச்சொன்னால்
சுழலும் ஒன்பது கோள்களுடன்
பாரிய வழிசெல்ல விதிசமைத்து
பால்வெளி இயங்கும் அழகைப்பார்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன்




சூரியப் பந்தின் அடுத்திருந்து
சுழல்வது சிறிய புதனாகும்
பாரிய விண்கல் வீழ்வதனால்
பள்ளம் படுகுழி பரந்திருக்கு





புதனில் மெதுவாய் இறங்கிடுவோம்
புதுமைகள் கண்டு வியந்திடுவோம்
மெதுவாய்க் குளிநீர் ஊற்றிடுவோம்
விரைந்து ஆவியாய் மாறிடும்பார்

ஒருமுறை தன்னைச் சுற்றிவர
ஐம்பத் தொன்பது நாளெடுக்கும்
ஒருமுறை பரிதியைச் சுற்றிவர
எண்பத் தெட்டு நாளெடுக்கும்



புதனில் நாம்வந்து குடியிருந்தால்
புதுமை பலவற்றை அறிந்திடலாம்
அதுதான் முந்நூ றாண்டுவரை
அற்புதப் புதனில் வாழ்ந்திடலாம்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி ( வீனஸ்)



வீனஸ் எனப்படும் வெள்ளியைப் பார்.
'வெனறா' விண்கலம் இறங்கியதாம்
தானாய் படம்பல எடுத்ததுவாம்
தகர்ந்து உருகிப் போனதுவாம்.


வெள்ளியும் புவியும் இரட்டையராம்
வளியில் அமுக்கம் அதிகமுண்டாம்
வெள்ளியில் உயிரினம் ஒன்றுமில்லை
வாயுவில் நச்சுத் தன்மையுண்டாம்



காலையும் மாலையும் தொடுவானில்
கண்கவர் காட்சியாய் சுடர்பரப்பும்
காலை மாலை வெள்ளியென்பார்
கிரேக்க ரோமரின் 'தயானா'வாம்.



மஞ்சள் நிறத்தில் வான்தெரியும்
மேக்ககூட்டம் விரைந்து செல்லும்
கொஞ்சும் புவியில் ஒருவருசம்
கோல வெள்ளியில் ஒருபகலாம்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமிப்பந்து




நீலக் கோளம் சுழல்கிறது
நமது பூம்பந்து அதுவாகும்
கோல நீலம் பச்சையுடன்
கூத்து ஆடிச் சுழல்வதைப்பார்



மரஞ் செடிகொடி உயிரினங்கள்
மனிதர் மாண்புறு செயல்வகைகள்
உரஞ்சேர் நீர்வளம் உளவளங்கள்
உள்ளது சொர்க்கம் பூமிதான்

நீரும் நிலமும் ஒளிர்கிறது
நலமே வளிமேகம் வலம் வருது
நீரேன் கீழே வழியவில்லை
நிலமும் சரிந்து சொரியவில்லை?



மரத்தில் காய்க்கும் காய்பழங்கள்
வந்து விழுவது நிலத்திலன்றோ?
உரத்த சிந்தனை புவியீர்ப்பு
ஐசாக் நியூட்டன் கண்டுசொன்னார்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரன்




சந்திரன் சுழன்று வருவதைப்பார்
தண்ணொளி இன்றித் திரிவதைப் பார்
அந்தரம் அங்கே உயிர்க்காற்று
ஒன்றும் இல்லை சூனியம்தான்





எரிமலை வாய்கள் பரந்திருக்கு
எங்கும் தூசி படிந்திருக்கு
எரிக்கும் வெப்பம் பகற்போதில்
எலும்பை உறைக்கும் குளிரிரவில்

சூரியன் ஒளிபட்டு ஒளிர்கிறது
சுடராய் தண்ணொளி படர்கிறது
காரியம் புவியீர்பைச் செய்கிறது
கடலில் வற்றுபெருக் குண்டாகிறது



ஆம்ஸ்ரோங் காலடி பதித்துள்ளார்
அத்தடம் என்றும் அழியாதாம்
நாம்போய் பார்த்துக் குடியமர்வோம்
நலமாய் வாழும் காலம்வரும்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாய் (மார்ஸ்)



செவ்வாய் நோக்கிப் புறப்படுவோம்
சிவப்புக் கோள்போல் தெரிகிறது
செவ்வாய் என்பது சின்னத்தம்பி
செல்லப் பெயரால் அழைப்பார்கள்.



செவ்வாய் தரையைப் பாருங்கள்
தெரிவது வயல்நிலம் கால்வாயா?
எவ்வாறு வரண்டெல்லாம் போயிற்று
ஏப்படி 'மரினரை' இறக்குவது?


எவரெஸ்ட் போலொரு மலைத்தொடரா?
எரிமலை 'ஒலிம்பஸ் மொன்ஸ்'தெரிகிறது
கவனம் 'மறினறிஸ்' பள்ளத் தாக்காம்
குன்றாய்த் தூசிகள் படிந்திருக்கு



எரியும் தீநிறம் கொண்டதுவாம்
அதனால் செவ்வாய் என்றார்கள்.
இரண்டு சந்திரன் உள்ளனவாம்
இவற்றை அசாப்ஹோல் கண்டறிந்தார்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வியாழன் (ஜுபிற்ரர்)



அடுத்து உள்ளது வியாழன்கோள்
அதனை கலிலியோ கண்டறிந்தார்
முடுக்கி விடுங்கள் விண்கலத்தை
மெதுவாய் இறங்கிப் பார்ப்போமா?



பென்னம் பெரிய கோளதனுள்
பூமிகள் ஆயிரம் வைத்திடலாம்
கண்கள் கூசும் ஒளியுடனே
கண்கவர் வளையம் தெரிவதைப்பார்




சந்திரன் நான்கு சேர்ந்துவரும்
சூழ்ந்து பலசிறு கோள்கள் சுற்றும்
இந்தப் பெரிய வியாழன்கோள்
உரோமர் வான் கடவுளென்பர்.

சுழலும் தூசிப் புயலடிக்கும்
தண்ணீர் சிறிதாய் உண்டென்றார்
கழன்று உடையும் ரயில்வண்டி
கனக்கும் பாரம் பெரிதாகும்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சனி (சற்ரேன்)



கண்கவர் ஒளிவட்டம் காணுங்கள்
கிரகம் அதுதான் சனியாகும்
விண்வெளிப் பயணம் அற்புதமே
விரைவோம் சனியை வலம்வருவோம்.

கலிலியோ முதன்முதல் கண்டறிந்தார்
கெட்டியாய் வளையங்கள் உள்ளதைப்பார்
ஒளிவிடும் நிறங்கள் எத்தனையோ
எழில்மிகு கிரகம் சனியல்லவோ?


'பயனியர்' 'வொயஜர்' விண்கலங்கள்
பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார்.
பயணம் நாமும் மேற்கொள்வோம்
பார்த்து புதினம் கண்டு சொல்வோம்.




சனி வளையங்கள்

சனியைக் கடவுளாய் வணங்குகிறார்
சற்றர்டே என்று பெயருமிட்டார்
சனிக்கு வாகனம் காகமென்றார்
கிழமையில் ஒருநாள் சனியென்றார்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜுரேனஸ்



வானத்தின் கடவுள் ஜுரேனஸ் என்பார்
வலம்வந்து பார்ப்போம் வாருங்கள்
நானதைச் சொல்வது நல்லதல்ல
நேரில் பார்ப்போம் வாருங்கள்.




நீல நிறத்தில் வலம் வருது
நீண்ட தூரத்தில் இருக்கிறது
ஏழாவது கிரகம் இதுவாகும்
இராட்சதக் கோளம் என்பார்கள்

பத்து மீற்றர் விட்டங்கொண்ட
பதினொரு வளையங்கள் தானுண்டு
அத்துடன் கண்கவர் நிறங்களில்லை
அதிகம் சந்திரர் வலம்வருது.



விண்வெளி ஆய்வில் நாட்டங்கொண்ட
வில்லியம் ஹேர்ஷல் கண்டறிந்தார்
நன்றே திருப்புங்கள் விண்கலத்தை
நெப்டியூன் பார்க்கச் செல்வோமே.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெப்டியூன்




எட்டாம் இடத்தில் இருப்பதுதான்
எங்கள் நெப்டியூன் கிரகமதாம்
விட்டம் பூமியை விடப்பெரிதாம்
விண்ணில் சிறிதாய் தெரிகிறதாம்.


கலிலியோ கண்ட நெப்டியூனை
கண்டு பார்த்து வந்திடலாம்
தொலைவில் உள்ள நெப்டியூனைச்
சுற்றி வளையங்கள் தெரியுதுபார்



பனிப்பூதம் என்றும் அழைப்பார்கள்
பயங்கரக் காற்று வீசுறதாம்
பனியும் பாறையும் கலந்துளதாம்
பார்க்க வொயஜர் சென்றுளதாம்

நெப்ரியூன் ரோமரின் கடல்தெய்வம்
கடல்நிறம் போலத் தெரிகிறதாம்.
'நெப்ரியூனலா' வென விழாவெடுப்பர்
நினைந்து போற்றி வழிபடுவர்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளுட்டோ



புளுட்டோ தெரியுது அங்கேபார்
பேசிவல் லொவர் அதைக்கண்டாராம்
கிளைட் தொம்பா அதைஆராய்ந்து
கிரகம் என்றதை நிரூபித்தார்

அங்கே பாருங்கள் துணைக்கோளை
அதன் பெயர் சிரோனென்று சொல்வார்கள்.
எங்கள் சூரியக் குடும்ப மதில்
ஒன்பது கிரகம் உண்டல்லவோ?



பாதாள உலகத்துக் கடவுளென
புளுட்டோவை கிரேக்கர் போற்றுகிறார்
ஆதாரம் தேடும் வானியல் சங்கம்
அகற்றியே விட்டார் புளுட்டோவை



'ஒன்பது கிரகத்துள் புளுட்டோவும்
இருக்குது' என்று உலகத்தோர்
கண்டனம் எழுப்பி வருகின்றார்
சோதிடக் கலைஞரும் விலக்கவில்லை








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்டவெளி



அண்ட வெளிக்கு அப்பாலும்
ஆயிரம் கோடி அண்டமுண்டாம்
விண்வெளி எங்கும் விரிந்துளது
முடியும் எல்லை இல்லையப்பா



விரிந்து விரிந்து செல்வதாலே
வெளியாய் நமக்குத் தெரிகிறது
புரிந்து கொள்ளும் திறனில்லை
புரிந்து கொள்ளும் ஆர்வமில்லை

விண்வெளி எங்கும் வியாபித்து
விரைந்து சுழலும் கோள்களுண்டு
கண்டு தெளிந்து அங்கெல்லாம்
காலம் கழிக்க நாள்வருமாம்



கடற்கரை மணலோ கணக்கில்லை
காணும் கோள்களும் கணக்கில்லை
இடமெலாம் சென்று பார்த்துவர
எமக்கு வாழ்நாள் போதாதாம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான்வெளி அற்புதம்




அற்புதம் அற்புதம் வான்வீதியுலா
அதிசயம் கண்டோம் அற்புதமே
சொற்பத தில்லை சொல்வதற்கே
சோதி மயமாம் வான்வெளியே.





விண்வெளி பார்த்தோம் வீடுசெல்வோம்
மீண்டும் வான்வழி வீடுசெல்வோம்.
கண்ட காட்சிகள் கற்பனையா
கனவா அல்லது நிஜந்தானா?


ஒருநாள் விண்வெளி செல்வோமாம்
ஒன்பது கிரகத்தில் குடியமர்வோம்
பெருநாள் மனிதர்க்குத் தூரமில்லை
பகுத்து அறிந்து செயற்படுவோம்.



உலக நாடுகள் ஒன்றெனவே
உணரும் காலம் வந்துவிட்டால்
பலரும் வான்வெளி பயணத்தில்
பெருவெற்றி கண்டு மகிழ்வார்கள்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே பிரபஞ்சம்



பிரபஞ்சம் என்பது புரிகிறதா
பால்வெளி என்பதும் தெரிகிறதா
பிரபஞ்சம் பால்வெளி பரந்துளது
பார்க்கும் இடமெல்லாம் பிரபஞ்சம்





விண்வெளி கடந்து போய்வருவோம்
விண்கலம் பற்பல செய்திடுவோம்
விண்ணில் உள்ள கோளனைத்தும்
வீடுகள் கட்டிக் குடிபெயர்வோம்.

பிரபஞ்சம் யாவையும் கண்டறிவோம்
வலைபின்னல் தொடர்பை வைத்திருப்போம்
பரந்துள்ள கோள்களில் உள்ளவற்றை
பார்த்துத் தெரிந்து உறவுகொள்வோம்



உயிரினம் யாவும் ஓரினமாய்
உணர்ந்து இயற்கையின் இரகசியத்தை
பயின்று உண்மைதனை உணர்ந்தால்
பாரினில் இன்பம் வேறில்லை











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு மலைச்சாரல்




நீல வானைத் தொடுவதற்கு
நிமிர்ந்து நிற்கும் மலையோரம்
நீல வானின் நிறம்பூசி
நீண்டு படுக்கும் நீர்நிலைகள்



மின்னல் வெட்டிப் பாய்வதனால்
வேண்டும் நைத ரசக்கலவை
மின்னல் கீற்றின் வழியோடு
வந்து நிலத்தில் கலந்திடுமாம்.

சின்ன வண்ணச் செடிகளுக்கு
தேவையான கால நிலை
என்ன இல்லை என்றுசொல்லி
எழுந்து பூக்கள் ஆடுதுபார்



வான வில்லின் சாயல்எல்லாம்
வண்ணம் சேர்த்து எழில்கூட்டி
காணும் உள்ளம் கவர்ந்திழுக்கும்
காட்சி காணில் அற்புதமே.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org